**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**
**(ஏப்ரல் 14-ம் தேதி முதல் ஏப்ரல் 18-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (11.04.17- 12.04.17)**

| | |
|---|---|
| (மி.மீ.) | 1.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 27 |
| வானம் (ஆக்டா) | 3 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 62- 63 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 41- 42 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 2 |
| காற்றின் திசை | 140 |

**18.04.17 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 14.04.17 | நாள் 2 15.04.17 | நாள் 3 16.04.17 | நாள் 4 17.04.17 | நாள் 5 18.04.17 |
| மழை (மி.மீ.) | 3 | 3 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 40 | 40 | 40 | 39 | 39 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 27 | 27 | 27 | 27 | 27 |
| வானம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 3 | 3 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 40- 62 | 40- 62 | 40- 62 | 40- 62 | 40- 62 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2/ தெற்கு | 2/ தெற்கு | 2/ தெற்கு | 2/ தெற்கு | 2/ தெற்கு |

**வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மேகமூட்டம், மிக இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்**

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பருத்தி (இறவை) | காய்க்கும் பருவம் | தற்பொழுது எதிர்பார்க்கப்படும் வானிலையில் பருத்தி இரகங்களில் காய்ப்புழுவின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. விளக்குப்பொறி மற்றும் இனக்கவர்ச்சிப்பொறி ஆகியவற்றை பயன்படுத்தி இப்பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கவும். |

| | | |
|---|---|---|
| | | ஒரு புழு ஆகும். முறையற்ற பூச்சிக்கொல்லி உபயோகத்தை தவிர்க்கவும். ஒவ்வொரு முறையும் வேறுபட்ட இனத்தை சார்ந்த பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகிக்கவும். தாக்குதல் பொருளாதார சேதநிலையை தாண்டினால் பாசலோன் 35% EC 2.5 லிட்டர்/ எக்டர் அல்லது கார்பரில் 50% WP 2.5 கிலோ/ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| மிளகாய் | காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் மிளகாயில் பழஅழுகல் நோயின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த மாங்கோசெப் 2 கிராம்/ லிட்டர் அல்லது காப்பர் ஆக்ஸி குளோரைடு 2.5 கிராம்/ லிட்டர் என்ற அளவில் மூன்று முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். |
| தக்காளி | காய்க்கும் பருவம் | தக்காளியில் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். 12- 61- 0 உரம் 1.14 கிலோ/ எக்டர், 13- 0- 45 உரம் 6.17 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 2.8 கிலோ/ எக்டர் என்ற அளவில் பாசன நீருடன் சேர்த்து அளிக்கவும். |
| முருங்கை | காய்க்கும் பருவம் | முருங்கையில் காய் ஈயின் தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த தயாமீத்தாக்ஸாம் 25WG @ 200 கிராம் a.i. / எக்டர் என்ற அளவில் நட்ட 150, 180 மற்றும் 210 நாட்களில் மண்ணில் இடவும். மேலும் தேவைப்பட்டால் இலைவழி மருந்தாக ஸ்பினோசாட் 45 SC @ 56 கிராம், a.i./ எக்டர் அதனை தொடர்ந்து புரப்பனோபாஸ் 50 EC @ 250 கிராம் a.i./ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கால்நடை பராமரிப்பு | வெப்பத்தின் தாக்கத்தை குறைத்தல் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக வெப்பநிலையின் தாக்கத்தை குறைக்க கால்நடைகளுக்கு குளிர்ந்த நீர் மற்றும் பசுந்தீவனங்களை போதிய அளவு அளிக்கவும். கொட்டகையை சுற்றிலும் கோணிப்பைகளை கட்டி நீரை தெளித்து அதிக வெப்பநிலையின் தாக்கத்தை மட்டுப்படுத்தவும். |

குறுஞ்செய்தி: மழை: 14- 15.4.17: தலா 3 மி.மீ பருத்தி- காய்ப்புழு- பாசலோன் 35% EC 2.5 லிட்டர்/எக்டர் (அ) கார்பரில் 50% WP 2.5 கிலோ/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி